நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# 29,000 ஹெக்டேரில் "ராஜராஜன்-1000' சாகுபடி

First Published : 20 Oct 2010 09:09:45 AM IST

திருச்சி, அக். 19: திருச்சி மாவட்டத்தில் நிகழாண்டு சம்பா பருவத்தில் 29,000 ஹெக்டேரில் ராஜராஜன்-1000 (செம்மை நெல்) சாகுபடி முறை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் கடந்த குறுவை பருவத்தில் 4,750 ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதில் 2,708 ஹெக்டேர் பரப்பளவில் ராஜராஜன்-1000 தொழில்நுட்ப முறையில் சாகுபடி செய்யப்பட்டது.

தற்போது, இந்த வயல்களில் அறுவடைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடியில் சராசரியாக 5.9 டன் மகசூல் பெறப்பட்டது.

ஆனால், ராஜராஜன்-1000 சாகுபடி முறையில் 10.44 டன் மகசூல் கிடைத்தது. இது சாதாரண நடவு முறையைவிட 77 சதம் அதிகம்.

மாவட்டத்தில் நிகழாண்டு சம்பா பருவத்தில் 62,500 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய வேளாண் துறை இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் 29,000 ஹெக்டேரில் ராஜராஜன்-1000 சாகுபடி முறையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் வரை 13,490 ஹெக்டேரில் சம்பா நடவுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதில் 6,610 ஹெக்டேரில் ராஜராஜன்-1000 சாகுபடி முறையில் பயிரிடப்பட்டுள்ளது.

இந்தச் சாகுபடி முறைக்கு 5 கிலோ விதை நெல் போதும் என்பதால், 5 கிலோ சிப்பங்களாக விதை நெல் விநியோகம் செய்யப்படுகிறது என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் மேலும் கூறியது:

"ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கர் அளவு வீதம் 1,000 இடங்களில் ராஜராஜன்-1000 சாகுபடி முறையிலான செயல் விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதில் ரூ. 3,000 மதிப்பிலான இடுபொருள்கள் பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2,700 இடங்களில் ஒரு ஹெக்டேர் வீதம் அளவில் ராஜராஜன்-1000 சாகுபடி தொழில்நுட்ப முறையில் செயல் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு செயல் விளக்கத்திலும் ரூ. 3,000 மதிப்பில் இடுபொருள்கள், உருளும் களைக் கருவி, குறியிடும் கருவி ஆகியவை மானியமாக வழங்கப்படுகின்றன.

இந்த முறைக்கான அரசு மானியங்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் பெற வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ளலாம்' என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சார திட்டத்தை உடனே நிறைவேற்றுங்கள்

First Published : 20 Oct 2010 04:21:04 AM IST



கேரள மாநிலத்தில் உரித்த தேங்காய் கொள்முதல் செய்வதில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் குறித்து அரசுக்கு அறிக்கை தர அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கைய

சென்னை, அக். 19: தமிழகத்தில் இரண்டு லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை தொய்வின்றி நிறைவேற்றிட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார்.

தமிழக வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்ற நிலைமை குறித்து, தலைமைச் செயலகத்தில் கருணாநிதி ஆய்வு நடத்தினார்.

தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கிடத் தேவையான இடு பொருட்களான விதை, உரம், பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்குத் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்றும், அவற்றின் இருப்பினை கண்காணித்து சீராக விநியோகம் செய்திட முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றும் அதிகாரிகளை அறிவுறுத்தினார் முதல்வர்.

""ராஜராஜன் 1000" தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்தால் ஹெக்டேருக்கு சராசரியாக 7 ஆயிரம் கிலோ முதல் 8 ஆயிரம் கிலோ வரை அரிசி உற்பத்தி கிடைக்கும் என்பதால், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்குத் தேவையான கருவிகளை உடனடியாக வழங்க வேண்டும் என உத்தரவிட்டார் அவர்.

எண்ணெய் வித்துகள் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும், துல்லிய பண்ணைத் திட்டத்தை மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்திட வேண்டுமெனவும் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

பயிர்க் காப்பீடு: பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் வெள்ளம் மற்றும் வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை குறித்த விவரங்களை கேட்ட முதல்வர் கருணாநிதி, மேலும் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்த உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

உழவர் சந்தைகள் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் பயனளித்து வருவதால் ஏற்கெனவே செயல்பாட்டிலுள்ள 153 உழவர் சந்தைகளுடன் புதிதாக அமைக்கப்பட்டு வரும் 25 உழவர் சந்தைகளையும் விரைவில் பயன்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டுமென அறிவுரை வழங்கினார்.

இலவச மின்சாரம்: விவசாய பம்ப் செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிய நிலையில், இதுவரை 21 லட்சத்து 98 ஆயிரத்து 790 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில், இலவச மின்சாரம் கோரி இப்போது நிலுவையிலுள்ள 2 லட்சம் விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்கும் பணியில் சுணக்கம் காட்டாமல் உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும் என அதிகாரிகளுக்கு முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டார்.

ஆய்வுக் கூட்டத்தின் தொடக்கத்தில், கேரள மாநிலத்தில் உரித்த தேங்காய் கொள்முதல் செய்வதில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் குறித்து அறிந்து வந்து அரசுக்கு அறிக்கை அளிக்க அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை முதல்வர் கருணாநிதியிடம் அளித்தார் வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம்.

**இலவச தேனீ வளர்ப்புப் பயிற்சி முகாம் தொடக்கம்**

First Published : 19 Oct 2010 12:10:05 PM IST

நாகர்கோவில், அக். 18: கன்னியாகுமரி மாவட்டத்தில் நலிந்தோருக்கான 6 நாள் இலவச தேனீ வளர்ப்புப் பயிற்சி முகாம் நாகர்கோவிலில் திங்கள்கிழமை தொடங்கியது.

நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற முகாம் தொடக்க நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் எஸ். செல்லகுமார் தலைமை வகித்தார். தேனீ வளர்ப்பு தொடர்பான புத்தகத்தை நபார்டு வங்கி துணைப் பொதுமேலாளர் எஸ். சங்கர் வெளியிட்டார்.

கல்லூரி விலங்கியல் துறை இணைப் பேராசிரியர் எஸ். சாம் மனோகர்தாஸ் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் சங்கர் பேசியதாவது:

இம் மாவட்டத்தில் தேனீ வளர்ப்புக்கு அதிக வங்கிக் கடன் பெற வாய்ப்புள்ளது. மாவட்டத்தில் கோழிக்கோட்டுப்பொத்தை, அருகுவிளை ஆகிய இரு கிராமங்களைத் தேர்வு செய்து அங்குள்ள விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் தேனீ வளர்ப்பு, இயற்கை உரம் தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து வங்கி சார்பில் பயிற்சி அளித்து வருகிறோம் என்றார் அவர்.

ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி கல்லூரி முதல்வர் எஸ். சுந்தரம், மாவட்ட தொழில்மையப் பொதுமேலாளர் ஜி. ஞானசேகர், ஜெ. ஜெயக்குமார், மண்டல காதி மற்றும் கதர் கிராம தொழில்கள் ஆணையத்தின் மேற்பார்வையாளர் ஜெ.எஸ். ஸ்டீபன் உள்ளிட்டோர் பேசினர்.

ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி கல்லூரி விலங்கியல் துறைத் தலைவர் ஏ.ஜே.ஏ. ரஞ்சித்சிங் பயிற்சி குறித்துப் பேசினார்.

ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி விலங்கியல் துறைத் தலைவர் எஸ். பிரசன்னகுமார் வரவேற்றார். இணைப் பேராசிரியர் எம். ரமணிபாய் நன்றி கூறினார்.

ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, ஸ்ரீபரமகல்யாணி கல்லூரி மற்றும் மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை ஆகியவை இணைந்து நடத்தும் இப் பயிற்சி முகாம் இம் மாதம் 23-ம் தேதி நிறைவடைகிறது.

**மறுகாய்ப்பு பருவத்தில் காய்த்துள்ள மாங்காய்கள்**

First Published : 19 Oct 2010 01:10:18 PM IST

கிருஷ்ணகிரி, அக். 18: மாங்காய் உற்பத்தி இல்லாத பருவமான மறுகாய்ப்பு காலத்தில் மா மரங்களில் மாங்காய்கள் காய்த்து வருகின்றன. நேர்த்தியான பராமரிப்பு மூலம் ஆண்டு முழுவதும் அதிக மகசூல் பெறலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா பயிருக்கு ஏற்ப சீதோஷ்ண நிலை உள்ளதால், சுமார் 50 ஆயிரம் ஏக்கரில் மா சாகுபடி செய்யப்படுகிறது. பெங்களூரா, நீலம், அல்போன்சா, பங்கனப்பள்ளி உள்ளிட்ட ரகங்களை விவசாயிகள் பயிரிடுகின்றனர்.

மே, ஜூன் மாதங்களில் ஹெக்டேருக்கு 7 டன் எனும் அளவில் மகசூல் பெறப்படுகிறது. மா பயிரானது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை காய்ப்பு தரக் கூடியது.

ஏப்ரல், ஜூன் மாதங்கள் தவிர ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மறுகாய்ப்பு காலங்களில் (ஆப் சீசன்) மகசூல் பெறப்படுகிறதாம்.

இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வழக்கத்துக்கு மாறாக நடப்பாண்டில் மறுகாய்ப்பு காலத்தில் மா மரத்தில் பூக்கள் பூத்து குலுங்குகின்றன. இந்தக் காலத்தின்போது, காய்க்கும் காய்கள் வழக்கமான எடையைவிட பாதியளவே இருக்குமாம்.

ஆனால், போச்சம்பள்ளியில் விவசாயி சிற்றரசு உள்ளிட்ட சிலரின் தோட்டங்களில் உள்ள காய்கள் வழக்கமான காய்களைப் போல தரமானதாகவும், எடை குறைவில்லாமலும் ஒரே மரத்தில்

நூற்றுக்கணக்கான காய்கள் காணப்படுகிறது. இது விவசாயிகளிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்தக் காய்கள் ஊறுகாய்கள் தயாரிப்புக்காகப் பயன்படும் என்பதும், கூடுதல் விலைக்கு விலை போவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த மாம்பழ சீசன் பருவத்தில் ஒரு கிலோ மாங்காய் |8 முதல் |15 வரை விலை போனது. தற்போது, கிலோ |60 முதல் |80 வரை விலைபோகிறது.

இதுகுறித்து கிருஷ்ணகிரியில் உள்ள டாக்டர் பெருமாள் வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள் கூறியது:

மா மரத்தில் சரியான அளவு நீர், தேவையான அளவு பேரூட்டச் சத்துகள், நுண்ணூட்ட சத்துகள், வளர்ச்சி சீர் ஊக்கிகள் மற்றும் சிறப்பான உழுவியல் முறைகளைக் கடைபிடித்தால் ஆண்டு முழுவதும் அதிக அளவு மகசூல் பெறலாம் என்றனர்.

**டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**

First Published : 19 Oct 2010 12:24:12 PM IST

மேட்டூர், அக். 18: மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு திங்கள்கிழமை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து காவரி டெல்டா பாசனத்திற்கு ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி முதல் ஜனவரி 28-ம் தேதி வரை தண்ணீர் திறக்கப்படும்.

குறுவை, சம்பா, தாளடி பயிர்கள் சாகுபடிக்கு 330 டி.எம்.சி. தண்ணீர் தேவை. டெல்டா மாவட்டங்களில் பெய்யும் மழையைப் பொருத்து, பாசன நீர்த் தேவை குறையும்.

நடப்பு நீர்ப்பாசன ஆண்டில் மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால், குறித்த நாளான ஜூன் 12-ல் தண்ணீர் திறக்கப்படவில்லை. மாறாக, ஜூலை 28-ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. டெல்டா பாசனப் பகுதி விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப தண்ணீர் விடப்படுகிறது.

கடந்த அக். 13-ம் தேதி முதல் டெல்டா பாசனத்திற்குத் திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 14 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டிருந்தது. இது திங்கள்கிழமை காலை 10 மணி முதல் விநாடிக்கு 16 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

இதனால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் மளமளவெனக் குறையத் தொடங்கியுள்ளது. எனவே, அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு ஜனவரி 28-ம் தேதி வரை தண்ணீர் வழங்க முடியுமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

கடந்த 83 நாள்களில் காவிரி டெல்டா பாசனத்திற்கு 69.13 டி.எம்.சி. தண்ணீர் மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்டுள்ளது. காவரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, தமிழகத்திற்கு திங்கள்கிழமைவரை 154.90 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் வழங்கியிருக்க வேண்டும். ஆனால் 77.81 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே வந்துள்ளது.

தமிழகத்திற்கு தர வேண்டிய தண்ணீரை, கர்நாடகத்திலிருந்து கேட்டுப் பெற்றால் மட்டுமே, டெல்டா பாசனத்திற்கு தட்டுப்பாடின்றித் தண்ணீர் வழங்க முடியும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**விளைநிலங்களின் வளத்தை பாதுகாக்க வேண்டும்**

First Published : 19 Oct 2010 11:28:00 AM IST

விருதுநகர், அக். 18: விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகள் விளை நிலங்களின் வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பாண்டியராசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பசுமைப் புரட்சி ஏற்பட்ட காலத்தில் உயர் விளைச்சல் தரும் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்த வேண்டி இருந்தது.

அதனால் இயற்கை உரங்களின் பயன்பாடு குறைந்து, ரசாயன உரங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக மண்ணின் பெளதிக மற்றும் ரசாயனப் பண்புகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மண்ணில் வாழக்கூடிய நன்மை தரும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைந்து மண்ணின் வளமும் குறைந்துள்ளது.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள விளைநிலங்களில் மண்ணின் உற்பத்தித் திறன் குறியீட்டு அளவு என்பது 60 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. இந்த தகவல் ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது. அதனால் விளைநிலங்களை விவசாயிகள் பாதுகாக்க வேண்டும்.

எனவே ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து இயற்கை உரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். மண்வள அட்டையை அடிப்படையாகக் கொண்டு ரசாயன உரங்களைப் பயன்படுத்துதல் அவசியமாகிறது.

நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், அசட்டோபாக்டர், ரைசோபியம், ல்போ பாக்டீரியா, அசோலா மற்றும் நீலப்பச்சை பாசி ஆகியவற்றை நேரடியாகவோ அல்லது விதையுடன் கலந்தோ விதைப்பது அவசியம்.

இந்தப் பயிர் சாகுபடியில் நுண்ணூட்ட உரங்களையும், உரக் கலவைகளையும் பயன்படுத்துதல் மற்றும் இயற்கை உரங்களான தொழு உரம், மக்கிய தொழு உரம், ஊட்டமேற்றிய தொழு உரம், கிராம கம்போஸ்டு, நகராட்சிக் கம்போஸ்டு, மண்புழு உரம், மக்கிய தென்னை நார்க் கழிவு மற்றும் சர்க்கரை ஆலைக் கழிவு போன்றகளை மண்ணில் இட வேண்டும். அதன் மூலம் ரசாயனப் பண்புகளை மேம்படுத்தி நன்மை தரும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.

தாவரக் கழிவுகளான வேப்பம் புண்ணாக்கு, ஆமணக்கு புண்ணாக்கு போன்றவற்றை மண்ணில் இட வேண்டும். நிலங்களில் ஒரே பயிரை சாகுபடி செய்யாமல், மாற்றுப் பயிர் செய்ய வேண்டும். பசுந்தழை உரப் பயிர்களை மண்ணில் மக்கச் செய்வது அவசியம். இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் தான் மண்வளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அதிக அளவில் இயற்கை உரங்களை இடுவதன் மூலம் சத்துக்கள் அனைத்தும் நிலை நிறுத்தப்படுகிறது. எனவே பயிர்களுக்குத் தேவையான மணிச்சத்து பயிருக்கு எளிதில் கிடைக்கிறது. மேலும் மண்ணில் ஈரப்பதத்தையும் பாதுகாக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

தடையின்றி

**தா.பேட்டை ஒன்றியத்திலுள்ள வேளாண் மாதிரி தோட்டத்தில் அதிகாரி ஆய்வு**

First Published : 20 Oct 2010 09:04:10 AM IST

முசிறி, அக். 19: தா.பேட்டை ஒன்றியத்தில் உள்ள வேளாண் மாதிரி தோட்டத்தில் வேளாண் துறை இணை இயக்குநர் ஜெ. சேகர் செவ்வாய்க்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பயிர் உற்பத்தியை அதிகரித்து, நிறைவான மகசூல் எடுக்கும் நோக்கத்துடன் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கத் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, திருச்சி மாவட்டம், தா.பேட்டை ஒன்றியம், சக்கம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள உளுந்து அனுசரனை ஆராய்ச்சி திடல், வளையெடுப்பில் ஆமணக்கு ஆதார விதைப் பண்ணை, தேவானூர் கிராமத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ள துவரை செயல் விளக்கத் திடல் ஆகியவற்றை வேளாண் துறை இணை இயக்குனர் ஜெ. சேகர் செவ்வாய்க்கிழமை பார்வையிட்டு, அங்கு ஆய்வு மேற்கொண்டார்.

தேவானூர் கிராமத்தில் அமைந்துள்ள தானியங்கி ஆய்வு நிலையத்திலிருந்து கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்திற்கு தா.பேட்டை வேளாண் கோட்டத்தில் நிலவும் வெயில், மழை, ஈரப்பதம் ஆகியவை சரியான கணக்கீட்டின் படி அளிக்கப்படுகிறதா என்பதை அவர் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, வேளாண் துறை உதவி இயக்குநர் (பொ) ராஜசேகர், வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட வேளாண் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**அக்.22-ல் விவசாயிகள் குறைகேட்பு**

First Published : 19 Oct 2010 12:38:00 PM IST

அரியலூர், அக். 18: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு நாள் கூட்டம் அக்.22-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை ) வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில், இடுபொருள்கள், வேளாண் உதவி குறித்த மனுக்களை அளித்து விவசாயிகள் பயன் பெறலாம்.

மாவட்ட ஆட்சியர் தி.க. பொன்னுசாமி திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் இதைத் தெரிவித்துள்ளார்.

**செம்மை நெல் சாகுபடி பயிற்சி முகாம்**

First Published : 19 Oct 2010 01:28:09 PM IST

திருவண்ணாமலை, அக்.18: தண்டராம்பட்டு தாலுகா, தச்சம்பட்டு கிராமத்தில் ராஜராஜன் 1000 செம்மை நெல் சாகுபடி செய்முறை பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

விவசாயி கோவிந்தராஜன் நிலத்தில் இளநிலை வேளாண் ஆராய்ச்சியாளர் பி.அமலா செம்மை நெல் சாகுபடி குறித்த செய்முறை பயிற்சி முகாமை நடத்தினார்.

கலவை ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தினமலர்

**நல்லூர் பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,01:00 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் அடுத்த நல்லூரில் வேளாண்மை துறை சார்பில் நீர் வள நில வள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடுபொருட் கள் வழங்கும் விழா நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் அப்பன்ராஜ் தலைமை தாங்கினார். துணை வேளாண்மை அலுவலர் பரமசிவம் முன் னிலை வகித்தார். விழாவில் நகர், எ.மரூர், சேப்பாக்கம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு தக்கை பூண்டு விதை, நெல் விதை மற்றும் நுண் ணுயிர் உரங்கள் மற் றும் இடு பொருட்கள் மானிய விலையில் வழங் கப்பட்டது.மேலும் விவசாய தொழில் நுட்ப அறிவுரை அளிக்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர்கள் இளவரசன், ராமசாமி, சின்னமணி உட் பட பலர் பங்கேற்றனர்.

**மணிமுக்தா பாசன விவசாயிகள் ஏக்கம் : 4,250 ஏக்கரில் சாகுபடி கேள்விக்குறி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,01:10 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி அடுத்த மணிமுக்தா அணையில் நீர் பிடிப்பு குறைவாக உள்ளதால் பாசன விவசாயிகள் கவலையில் மூழ்கியுள்ளனர். கள்ளக்குறிச்சி பகுதியில் கோமுகி மற்றும் மணிமுக்தா அணைகள் உள்ளது. கோமுகி அணை கல்வராயன் மலை அடிவாரத்தில் உள்ளதால் மழை பெய்த சில நாட்களிலேயே நீர் வரத்து அதிகரித்து, அணை நிரம்பிவிடும். ஆனால் மணிமுக்தா அணை நிரம்புவதற்கு, தொடர்ந்து பலத்த மழை பெய்தால் மட்டுமே நீர் வரத்து அதிகரிக்கும். கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த பலத்த மழையால் கோமுகி அணைக்கு நீர் வரத்து அதிகரித்து.

கோமுகி அணையின் மொத்த கொள்ளளவான 561 மில்லியன் கன அடியில் (46 அடி) தற்போது 393 மில்லியன் கன அடி (41 அடி) நீர் பிடிப்பு உள்ளது. அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக கடந்த 13ம் தேதி தண்ணீரை கலெக் டர் பழனிசாமி திறந்து விட்டார். வரும் 27ம் தேதி வரை 15 நாட்களுக்கு புதிய பாசனத்திற்கு 50 கன அடி தண்ணீரும், பழைய பாசனத்திற்கு 60 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அதனை தொடர்ந்து 28ம் தேதி முதல் 45 நாட்களுக்கு புதிய பாசனத்திற்கு 100 கன அடியும், பழைய பாசனத்திற்கு 120 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படும்.

மேலும் புதிய பாசனம் மூலம் 5 ஆயிரம் ஏக்கர் நிலமும், பழைய பாசனம் மூலம் 5,860 ஏக்கர் நிலமும் பாசனம் பெறுகிறது. புதிய பாசனத்தில் 7 கிராமம் மற் றும் பழைய பாசனத்தில் 11 அணைக்கட்டுகள் மூலம் 33 கிராமங்களும் பாசன வசதி பெறுகிறது. இதேபோல் மணிமுக்தா

அணை பகுதிகளில் தொடர்ந்து சில நாட்கள் பலத்த மழை பெய்தாலும் அணைக்கு நீர் வரத்து குறைவாகவே இருந்தது. இதனால் மணிமுக்தா அணை பாசன விவசாயிகள் பெரும் கவலையடைந்தனர். இந்த அணையின் மொத்த கொள்ள ளவான 736 மில்லியன் கன அடியில் (36 அடி உயரம்) தற்போது 74 மில்லியன் கன அடி (20 அடி உயரம்) தண்ணீர் இருப்பு மட்டுமே உள்ளது. பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும் என்றால் 355 மில்லியன் கன அடி (30 அடி உயரம்) நீர் பிடிப்பு உயர வேண்டும். ஆண்டுதோறும் அக்., 2ம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட வேண்டும்.

தற்போது அணையில் குறைந்தளவே நீர் பிடிப்பு உள்ளதால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு வாய்ப்பில்லை. இந்த அணை பாசனத்தை நம்பி 9 கிராமங்களில் 4,250 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக மணிமுக்தா அணையில் தொடர்ந்து இது போன்ற சூழ்நிலை நிலவி வருவதால் பாசன விவசாயிகள் கவலையில் மூழ்கியுள்ளனர். மேலும் இந்த அணையை நம்பியுள்ள பாசன விவசாயிகள் வருண பகவான் கருணை காட்டுவது எப்போது என்ற ஏக்கத்தில் தவித்து வருகின்றனர்.

**மக்காச்சோளம் கொள்முதல் நிலையம் வேப்பூர் விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,00:59 IST

சிறுபாக்கம் : வேப்பூர் பகுதியில் மக் காச்சோளம் பயிருக்கு அரசு கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க் கின்றனர். சிறுபாக்கம், மங்களூர், மலையனூர், ஒரங்கூர், பனையாந்தூர், வேப்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பெரியநெசலூர், அரியநாச்சி, கழுதூர், சேப் பாக்கம், அடரி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் தங்களின் மானாவாரி விளை நிலங்களில் அதிகளவில் பாரதி, ராசி, பயோனியர், காவேரி, கார்கில் ஆகிய ரக மக்காச்சோள பயிர் விளைவித்துள்ளனர். தற்போது கதிர் உருவாகும் நிலையில் உள்ளது. இதனை உடுமலைப் பேட்டை, தூத்துக்குடி, பொள்ளாச்சி பகுதிகளிலிருந்து மொத்த வியாபாரிகள் இடைத்தரகர்கள் மூலம் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்கின்றனர். அதிக விளைச்சல் தரும் மக்காச்சோள பயிருக்கு நியாயமான விலை கிடைக்க மங்களூர் அல் லது வேப்பூர் பகுதியில் அரசு கொள்முதல் நிலையம் திறக்க வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க் கின்றனர்.

**18 ஆயிரம் ஏக்கரில் செம்மை நெல் சாகுபடி : கலெக்டர் சந்திரகுமார் தகவல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,02:47 IST

சேலம்: ""சேலம் மாவட்டத்தில் 18 ஆயிரம் ஏக்கரில் "ராஜராஜன் 1,000' செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது," என நெல் சாகுபடி செயல்விளக்க முகாமில் கலெக்டர் சந்திரகுமார் தெரிவித்தார்.இடைப்பாடி தாலுகா அரசிராமணி பேரூராட்சிக்கு உட்பட்ட குள்ளம்பட்டி செட்டிப்பட்டியில் ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறையில் இயந்திரங்களை பயன்படுத்துவது குறித்த செயல்விளக்க முகாம் நடத்தப்பட்டது.கூட்டுறவுத்துறை மற்றும் வேளாண் துறை சார்பில் நடந்த இம்முகாமை மாவட்ட கலெக்டர் சந்திரகுமார் துவக்கி வைத்தார். நெல் நடவு இயந்திரம், கோனாவீடர், பவர்வீடர் கருவிகளின் செயல் விளக்கத்தை பார்வையிட்டார். இயந்திரம் மூலம் நடவு செய்ய தேவையான நாற்றங்கால் உருவாக்குவது குறித்த பயிற்சியையும் அவர் பார்வையிட்டார். தொடர்ந்து கலெக்டர் பேசியதாவது: சேலம் மாவட்டத்தில் இரண்டு ஆண்டுகளாக ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 49 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படு வருகிறது. 2006 - 07ம் ஆண்டு 500 ஏக்கரில் இம்முறையில் நெல் நடவு செய்யப்பட்டது. சாகுபடி மூலம் 70 சதவீதம் மகசூல் அதிகரித்ததை அறிந்து கொண்ட விவசாயிகள் 18 ஆயிரம் ஏக்கர் பரப்பில் செம்மை நெல் சாகுபடியை செய்துள்ளனர்.சங்ககிரி விவசாயிகளிடையே இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. விவசாய பணிகளுக்கு அதிக கூலி, ஆட்கள் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் பல புதிய இயந்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நெல் நடவு, களை எடுக்கும் கருவி மற்றும் விவசாயத்துக்கு பயன்படுத்தக்கூடிய கருவிகளை வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்க கூட்டுறவுத்துறை உதவி செய்கிறது.வேளாண் இயந்திரம் இயக்குவதற்கு பசுமைபடை என்ற அமைப்பின் மூலம் இளைஞர்களுக்கு சிறப்பான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இயந்திரங்கள் பயன்படுத்தும்போது பணம் மிச்சமாவதுடன், வேலையும் விரைவாக முடிக்கப்படுகிறது.இவ்வாறு அவர் பேசினார்.கூட்டுறவு இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், வேளாண் துணை இயக்குனர் உதயகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) செங்கோட்டுவேல் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**கொண்டை கடலை சாகுபடி தொழில் நுட்பம் குறித்து வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,00:59 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் குளிர் காலத்துக்கு ஏற்ற கொண்டை கடலை சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.
தர்மபுரி உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் மேகநாதன் வெளியிட்ட அறிக்கை:

பனிக்கடலை என அழைக்கப்படும் கொண்டை கடலை சாகுபடி செய்ய இது ஏற்ற தருணமாகும். தர்மபுரி மாவட்டத்தில் சராசரியாக 5,000 ஏக்கரில் இப்பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.குறிப்பாக கரிசல் மண் பகுதியான தர்மபுரி, கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி பிர்கா பகுதியில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. பருப்பு வகைகள் நல்ல விலைக்கு விற்கப்படுவதால், இப்பயிர் சாகுபடி மூலம் நல்ல வருவாய் பெற முடியும்.விவசாயிகள் கொண்டை கடலை சாகுபடி தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து கூடுதல் மகசூல் பெறலாம். கொண்டை கடலை பயிர் சாகுபடி செய்ய குளிர் காலங்களான அக்டோபயர், நவம்பர் ஏற்றதாகும். இப்பயிர் குறைந்த நீர் தேவையை கொண்டு பனியில் வளரக்கூடியது.

இப்பயிருக்கு களிமண் பாங்கான நிலம் உகந்ததாகும். கோ 3 மற்றும் கோ 4 ரகங்கள் பயிரிட ஏற்றதாகும். ஒரு ஏக்கருக்கு 30 முதல் 40 கிலோ விதை போதுமானது. செடிக்கு செடி 30 செ.மீ., இடைவெளியும், பயிருக்கு பயிர் 10 செ.மீ., இடைவெளியும் இருக்குமாறு விதைப்பு செய்ய வேண்டும்.விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் "கார்பென்டாசிம்' அல்லது நான்கு கிராம் திரம் பூஞ்சான கொல்லிமருந்தை விதையுடன் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின் நுண்ணுயிர் உரமான "ரைசோபியம்' இரு பாக்கெட் (ஏக்கருக்கு 400 கிராம்) மற்றும் "பாஸ்போபாக்டீரியா' இரு பாக்கெட் ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

விதைக்கும் முன் அடியுரமாக ஏக்கருக்கு ஐந்து டன் மக்கிய தொழு உரம் ஐந்து கிலோ தழைச்சத்து தரும் 10 கிலோ யூரியா, 10 கிலோ மணிசத்து தரும் 62 கிலோ சூப்பர் பாஸ்பேட் அல்லது 25 கிலோ டி.ஏ.பி., மற்றும் ஐந்து கிலோ சாம்பல்சத்து தரும் 10 கிலோ பொட்டாஷ் உரங்களை இட வேண்டும். கொண்டை கடலை பயிரில் தோன்றும் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த விதைத்த 30ம் நாள் சூடோமோனாஸ் அல்லது டிரைக்கோடெர்மா விருடி ஏக்கரக்கு ஒரு கிலோ பூஞ்சனகொல்லி மருந்தை 50 கிலோ எரு அல்லது மணலுடன் கலந்து இட வேண்டும்.இப்பயிர் அதிக பராமரிப்பு செலவில்லாமல் மானவாரியில் 85 நாட்களில் முதிர்ச்சி அடைந்து ஏக்கருக்கு சுமார் 300 முதல் 400 கிலோ மகசூல் கொடுக்க கூடிய பயிராகும். விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க மையத்தில் கிடைக்கும் சான்று பெற்ற விதைகளை வாங்கி சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**உழவர் சந்தையில் காய்கறிகள் ரூ.18 லட்சத்துக்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,01:21 IST

ஓசூர்: ஓசூர் உழவர்சந்தையில் விஜயதசமியையொட்டி 18 லட்சம் ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனை நடந்தது.கடந்த 16ம் தேதி விஜயதசமியையொட்டி ஓசூர் உழவர் சந்தையில் விவசாயிகள் அதிகளவு காய்கறிகள், மலர்களை விற்பனைக்கு கொண்டு வந்தனர். உழவர் சந்தையில் 131.740 மெட்ரிக் டன் காய்கறிகள் 17 லட்சத்து 99 ஆயிரத்து 540 ரூபாய்க்கு விற்பனை நடந்தது.

உழவர் சந்தை நிர்வாக அலுவலர் மேகநாதன் கூறியதாவது: ஓசூர், ராயக்கோட்டை, ஒடையான்பள்ளி, லிங்கனம்பட்டி, அளேசீபம், பிள்ளார் அக்ரஹாரம், தின்னூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து விஜயதசமி அன்று 1,887 கிலோ செவ்வந்தி, செண்டு மல்லி, முல்லை மற்றும் ரோஜா மலர்கள் விற்பனைக்கு வந்தன.ஒரு லட்சத்து 79 ஆயிரத்து 605 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. காய்கறிகள், பூக்கள் உள்ளிட்ட 98 வகை ரகங்களை 335 விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். 17 ஆயிரத்து 950 நுகர்வோர்கள் உழவர்சந்தைக்கு வந்து காய்கறிகள், மலர்கள் வாங்கி சென்றனர்.இவ்வாறு கூறினார்.

**மானிய விலையில் காய்கறி விதை சப்ளை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,03:30 IST

நாமக்கல்: "நாமக்கல் வட்டாரத்தில் 50 சதவீதம் மானிய விலையில், காய்கறி விதைகள் விற்பனை செய்யப்படுகிறது' என, நாமக்கல் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தில் நம்பர் 10 வீரிய ரக வெண்டை, உயர் ரக சிறுகீரை, பாகல், கொத்தவரை மற்றும் தக்காளி விதைகள் 50 சதவீதம் மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிக பட்சம் 1.25 ஏக்கருக்கு உரிய காய்கறி விதைகள் மானிய விலையில் வழங்கப்படும். விவசாயிகள் தேவைக்கு தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொண்டு காய்கறி விதைகள் மானிய விலையில் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ரூ.56 லட்சத்துக்கு நிலக்கடலை வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,00:58 IST

அவிநாசி:சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நிலக்கடலை வரத்து அதி கரித்திருந்தது; ஆனால், விலை சற்று குறைந்தது.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த இந்த வார ஏலத் துக்கு 5,500 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை விட 975 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்துள்ள நிலையில் விலை சற்று இறக்கம் காணப்பட்டது. ஆனால், பச்சை ரகம் குவிண்டாலுக்கு ரூ.500 அதிகரித்தது.இந்த வார ஏலத்தில், காய்ந்த நிலக்கடலை முதல் ரகம் குவிண் டாலுக்கு ரூ.3,450 முதல் ரூ.3,530 வரை, இரண் டாம் ரகம் ரூ.3,200 முதல் ரூ.3,400 வரை, பச்சை ரகம் ரூ.1,900 முதல் ரூ.2,300 வரை ஏலத்தில் எடுக்கப்பட்டது.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண் காணிப்பாளர் (பொறுப்பு) ரமேஷ் குமார் கூறுகையில், ""இந்த வாரம் அதிகரித் திருந்தாலும்கூட விலை யில், சற்று குறைவு ஏற் பட்டுள்ளது. இருப்பினும், பச்சை ரகம் குவிண்டா லுக்கு ரூ.500 அதிகரித்தி ருந்தது. ஏலத்தில் 565 விவசாயிகள், 37 வியாபாரி கள் பயனடைந்தனர். ரூ.56 லட்சத்துக்கு வர்த் தகம் நடந்தது,'' என்றார்.

**தோட்டக்கலைத்துறையினருக்கு வெற்றிலை விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,01:06 IST

மடத்துக்குளம்:பல்வேறு காரணங்களால் மடத்துக்குளம் பகுதியில் வெற்றிலை சாகுபடி பரப்பு முற்றிலுமாக குறைந்துள்ளதற்கு தோட்டக்கலைத்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.மடத்துக்குளம் கணியூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் அமராவதி பாசனத்தில் நீண்ட கால பயிரான வெற்றிலை அதிகளவு பயிரிடப்பட்டு வந்தது. சர்க்கரை மற்றும் கற்பூர வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு மாநிலத்தின் பல பகுதிகளுக்கு அனுப்பப் பட்டது. வெற்றிலை சாகுபடிக்கான நாற்றுகள் இப்பகுதியிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதன் நாற்றுகள் பராமரிப்பை பொறுத்து பல ஆண்டுகள் வரை விளைச்சல் தரும். 1 சென்ட் பரப்பில் 700 செடிகள் வரை நடவு செய்யப்படுகின்றன. ஊடுபயிராக கீரை உட்பட பயிர்கள் பயிரிடப்படுகின்றன. பயிரிடப்பட்ட ஆறு மாதங்களுக்கு பிறகு 22 நாட்களுக்கு ஒரு முறை

வெற்றிலை அறுவடை செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் ஆத்தூர் உட்பட சில பகுதிகளில் மட்டுமே வெற்றிலை பயிரிடப்படுகிறது. கணியூர் பகுதியில் இருந்த மண் வளம் வெற்றிலை சாகுபடிக்கு உகந்ததாக இருந்ததால் காரத்தொழுவு, கணியூர், சோழமாதேவி ஆகிய பகுதிகளில் அதிகளவு வெற்றிலை கொடி பயிரிடப்பட்டு வந்தது. இந்நிலையில், சாகுபடியில் ஏற்பட்ட பல்வேறு பிரச்னைகள் காரணமாக வெற்றிலை சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. வெற்றிலை சாகுபடி செய்யும் பரப்பு ஆண்டுதோறும் சுருங்கி தற்போது வெறும் 15 ஏக்கராக மாறியுள்ளது.வெற்றிலை விவசாயிகள் கூறியதாவது:வெற்றிலை சாகுபடிக்கு அதிக செலவு பிடிக்கும். போதிய விளைச்சல் மற்றும் விலை இருந்ததால் இப்பகுதியில் அதிகளவு வெற்றிலை பயிரிடப்பட்டு வந்தது.

சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும், இதர ஆலோசனைகளும் வேளாண் மற்றும் தோட்டக்கலை துறையினர் விவசாயிகளுக்கு வழங்குவதில்லை.முறையாக ஆலோசனைகள் கிடைக்காததால் ஆண்டுதோறும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாற்று சாகுபடிக்கு மாறியுள்ளனர். கணியூர் பகுதியில் வெற்றிலை சாகுபடியை காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் மண் வளம் மற்றும் இதர பிரச்னைகள் குறித்து ஆய்வு செய்து விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகள் வழங்க வேண்டும் என்றனர்.

**மலர்சாகுபடியை அதிகரிக்க மானியம்: விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,01:03 IST

உடுமலை:உடுமலை பகுதியில் மலர் சாகுபடி பரப்பை அதிகரிக்க தோட்டக்கலைத்துறை சார்பில் மானியத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், தோட்டக்கலைப்பயிர்களான தக்காளி, கத்தரி, வெங்காயம், வெண்டை, பீட்ரூட் அதிகளவு பயிரிடப்படுகிறது. மலர் சாகுபடி குறித்த விழிப்புணர்வு இல்லாததால் இப்பகுதியில் மல்லி, கோழிக்கொண்டை, செண்டுமல்லி மற்றும் இதர பூக்கள் குறைந்தளவே சாகுபடி செய்யப்படுகிறது.இதனால், உடுமலை பகுதி மக்கள் வெளிமாவட்டங்களிலிருந்து வரும் பூக்களை பயன்பாட்டிற்கு நம்பியிருக்க வேண்டியுள்ளது.

முகூர்த்த சீசன் சமயங்களில் முற்றிலுமாக வரத்து குறைந்து, பூக்களின் விலை கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு சென்று அனைத்து தரப்பு மக்களும் பாதிக்கப்படுகின்றனர்.காய்கறி

சாகுபடியில் போதிய விலை கிடைக்காதது போன்ற பிரச்னைகளை சந்திக்கும் விவசாயிகள் மாற்றுப்பயிரை பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர். பல விவசாயிகள் மலர் சாகுபடியில் களமிறங்க ஆர்வம் காட்டினாலும் அவர்களுக்கு எந்த வழிகாட்டுதலும் இல்லை. குறிச்சிக் கோட்டை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக சோத னை முயற்சியாக ஒரு சில விவசாயிகள் கோழிக்கொண்டை, செண்டுமல்லி ஆகிய பூக்களை பயிரிட்டு வருகின்றனர்.

இந்த விவசாயிகள் பூ சாகுபடியில் பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர். நோய்த்தாக்குதல், விளைச்சல் குறைவு காரணமாக நஷ் டம் ஏற்பட்டு வருகிறது. இவ்வாறு, சோதனை முயற்சியாக பூக்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை சார்பில் எந்த உதவியும் வழங்கப்படுவதில்லை.மலர் சாகுபடி செய்ய தேவையான மண்வளம், நீர் வளம் இருந்தும் சாகுபடியை தோட்டக்கலைத்துறையினர் கண்டுகொள்ளாமல் இருப்பது விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.இதுகுறித்து தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறுகையில், தோட்டக்கலைத்துறை சார்பில் மலர் சாகுபடிக்காக பல்வேறு மானியங் கள் உள்ளது. இந்த திட்டங்கள் குறிப் பிட்ட சில வட்டாரங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. உடுமலை பகுதியில் தற்போது காய்கறி மற்றும் வாழை சாகுபடி பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மலர் சாகுபடிக்கு உடுமலை பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டுவது குறித்து அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும் என்றனர்.

**நவம்பருக்குள் விற்பனை செய்யுங்க ஏலக்காய் விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,01:33 IST

கூடலூர்:"கூடலூர், பந்தலூர் பகுதிகளில் விளைந்துள்ள ஏலக்காயை அறுவடை செய்து, நவம்பர் மாதத்துக்குள் விற்பனை செய்தால் அதிக விலை கிடைக்கும்' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.கூடலூர், பந்தலூர் பகுதிகளில், தேயிலை, காபி, குறுமிளகு போன்று, ஏலக்காய் விவசாயத்திலும், அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். நடப்பாண்டு, ஏலக்காய்க்கு போதிய விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அறுவடை செய்யப்பட்ட ஏலக்காயை, நவம்பருக்குள் விற்பனை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.நீலகிரி மாவட்ட வேளாண் விற்பனைத் துறை துணை இயக்குனர் முரளிதரன் வெளியிட்டுள்ள அறிக்கை:தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண் சந்தை ஆய்வு மையம், கடந்த 13 ஆண்டுகளாக

ஏலக்காயின் விலை விபரங்களை ஆய்வு செய்தது; நடப்பாண்டு, ஏலக்காய் உற்பத்தி 30 சதவீதம் குறைந்துள்ளது என தெரிவித்துள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் 90 சதவீத ஏலக்காய், உள்நாட்டிலேயே பயன்படுத்தப்படுகிறது. உள்நாட்டின் தேவை 11 ஆயிரம் டன்; கையிருப்பு 1,500 டன் மட்டுமே; வட மாநிலங்களில் அதிகளவு பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில், ஆகஸ்ட் முதல் மார்ச் வரை அறுவடைப் பருவமாக உள்ளது. ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை அதிக வரத்தும், ஜனவரி முதல் மார்ச் வரை குறைந்த வரத்தும் இருக்கும். 2009-"10ம் ஆண்டில் இந்தியாவின் ஏலக்காய் உற்பத்தி 14 ஆயிரம் டன். கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் மட்டும் 12 ஆயிரம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் போடிநாயக்கனூரில், ஏலக்காய் விற்பனை மையம் உள்ளது. ஜூன் முதல் ஏலக்காய் வரத்து குறைவாக இருப்பதால், தற்போது இதன் விலை அதிகரித்துள்ளது.கூடலூர், பந்தலூர் பகுதிகளில் விளைந்துள்ள ஏலக்காயை அறுவடை செய்து, நவம்பருக்குள் விற்பனை செய்தால் அதிக விலை கிடைக்கும்.

**மானிய விலையில் விதை விநியோகம் : தயார் நிலையில் தோட்டக்கலைத்துறை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,01:15 IST

கரூர்: கரூர் மாவட்டம், தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் பல்வேறு மத்திய, மாநில மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

தோட்டக்கலைதுறை துணை இயக்குனர் கந்தசாமி அறிவித்துள்ளதாவது: தாந்தோணி வட்டாரத்தில் பல்வேறு திட்டப்பணிகள் தோட்டக்கலை விவசாயிகளுக்காக செயல்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் பழ மரக்கன்று மற்றும் காய்கறி விதைகள் 50 சதவீத மானிய விலையில் தா ந்தோணி வட்டார வேளாண் மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது.தோட்டக்கலை விவசாயிகளுக்கு இடுபொருள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.தாந்தோணி வட்டாரத் திட்டப்பணிகளை மாநில தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் மோகன் ஆய்வு செய்தார். பல்வேறு மானிய திட்டங்களை அரசு விதிகளின்படி தோட்டக்கலை விவசாயிகளுக்கு குறித்த பருவத்தில் விநியோகம் செய்து தோட்டக்கலைப்பயிர்கள் உற்பத்தியை பெருக்கிட உரிய நடவடிக்கை எடுக்க களப்பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

**பூக்கள் சாகுபடி செய்ய அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,00:07 IST

சிவகாசி : சிவகாசி பகுதியில் உயர் தொழில் நுட்பத்தில் உற்பத்தி திறன் அதிகரித்தல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதில் விவசாயிகள் முந்திரி, கருவேப்பிலை, புளி, மல்லிகை, கோழிக்கொண்டை பூ, செவ்வந்தி பூ, கனகாம்பரம் சாகுபடி செய்யப்பட உள்ளன. விவசாயிகளுக்கு ஒரு எக்டேருக்கு 7,500 ரூபாய் மதிப்பிலான செடிகள் மற்றும் இடுபொருட்கள் மானியமாக வழங்கப்படும். சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலை துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என தோட்டக்கலை உதவி இயக்குனர் செல்வம் தெரிவித்துள்ளார்.

**பிசான நெல் சாகுபடியில் புதிய தொழில் நுட்பம் ராஜராஜன் 1000**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,02:29 IST

தென்காசி : செங்கோட்டை வட்டார பகுதியில் புதிய தொழில் நுட்பமான ராஜராஜன் 1000 முறையில் பிசான நெல் சாகுபடி செய்ய வேண்டும் என வேளாண்மை அதிகாரி கூறியுள்ளார்.

இதுகுறித்து செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: செங்கோட்டை வட்டாரம் செங்கோட்டை, புளியரை, தவணை, இலத்தூர், சீவநல்லூர், சித்ராபுரம், ஆய்க்குடி, சாம்பவர்வடகரை பகுதிகளில் பிசான நெல் நாற்று பாவும் பணி நடக்க இருக்கிறது. நெல் சாகுபடியில் புதிய தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை செம்மை நெல் சாகுபடி முறை ராஜராஜன் 1000 என்று அழைக்கப்படும். ராஜராஜன் 1000 என்ற புதிய தொழில் நுட்ப யுக்தியை கடைபிடித்து விவசாயிகள் உச்ச விளைச்சலை பெற வேண்டும்.

பாரம்பரிய முறையில் ஏக்கருக்கு 20 முதல் 30 கிலோ பயன்படுத்தி வந்தோம். இம்முறையில் ஏக்கருக்கு 3 கிலோ நெல் விதை போதும். இதன் மூலம் விதை மட்டும் 27 கிலோ மிச்சமாகிறது. மேலும் நாற்று பாவ பாரம்பரிய முறையில் ஏக்கருக்கு 8 செண்ட் நாற்றாங்கால் தேவை.

இம்முறையில் ஏக்கருக்கு 5க்கு1 மீட்டர் அளவுடைய 8 பாத்திகள் அதாவது 1 சென்ட் நாற்றாங்கால் போதுமானது. இதன் மூலம் நிலம் தயாரிப்பு செல்வு குறைகிறது.

நடவு செய்யும் போது விதைத்த 25 முதல் 30 நாட்களில் நடவு செய்வது வழக்கம். இம்முறையில் 14 அல்லது 15வது நாட்களில் நடவு செய்திடலாம். இதனால் நாற்றாங்கால் பராமரிப்பு செலவு குறைகிறது. மேலும் நடவு செய்யும் போது 25க்கு25 செ.மீ.இடைவெளியில் நடவு செய்திட வேண்டும். இதனால் பயிருக்கு நல்ல இடைவெளி கிடைத்து நல்ல காற்றோட்டம் கிடைக்கிறது. சூரிய வெளிச்சம் கிடைக்கிறது. மேலும் கோனோவீடார் மூலம் களை எடுப்பதும் எளிதாகிறது. எலி வெட்டும் குறைகிறது.

சாதா நடவு முறையில் கைகளையாக களைகளை நீக்குவது வழக்கம். ராஜராஜன் 1000 முறையில் கோனோவீடார் மூலம் களைகள் நீக்கப்படுகிறது. இதனால் நிலம் மிருதுவாகி வேர்கள் செழித்து வளர முடிகிறது. சிம்புகள் அதிகமாக வெடித்து பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல மகசூல் கிடைக்கும். இதனால் விவசாயிகள் பிசான நெல் சாகுபடியில் ராஜராஜன் 1000 என்ற புதிய தொழில் நுட்ப யுக்தியை கடைபிடிக்குமாறு வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**கார் நெல் அறுவடை தொழில் நுட்பம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,02:30 IST

தென்காசி : கார் நெல் அறுவடை குறித்த தொழில் நுட்பங்களை செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் விளக்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: செங்கோட்டை வட்டாரம் செங்கோட்டை, கற்குடி, பகவதிபுரம், புளியரை பகுதிகளில் கார் நெல் அறுவடைக்கு தயாராக இருக்கிறது. நெல் பயிரை அறுவடை செய்வதற்கு ஒரு வாரம் முன்பு நீரை வடித்து விட வேண்டும். நெல் பயிரில் அடிப்பச்சை இருக்கும் போதே அறுவடை செய்திட வேண்டும். களங்களை அறுவடை வயலுக்கு அருகாமையில் வைத்து கொள்ள வேண்டும். அறுவடை செய்த பின் நெல் மணிகளை 12 சதம் ஈரப்பதம் வரும் வரை காய வைத்து பின் சேமித்திட வேண்டும். இவ்வாறு அறுவடை செய்தால் நெல் மணிகள் வீணாகாமல் முழுமையான மகசூல் எடுக்க முடியும் என வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**நவீன தொழில்நுட்பம் - காட்டு முள்ளங்கி சாகுபடி நுட்பங்கள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,00:00 IST

காட்டு முள்ளங்கியின் அறிவியல் பெயர் ""அர்மோரேசியா ருஷ்டிகானா" . இது கடுகுவகை குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் வேர்கள் நல்ல நறுமணத்துடன் பயன்பாட்டுக்கு உகந்த பகுதியாக உள்ளது. சிறுநீர்ப்பாதையில் ஏற்படும் பல்வேறுவகையான தொற்றுகளை குணப்படுத்த பயன்படுகிறது. வேரில் உள்ள சினிகிரின் என்ற அமிலமானது வேதிமாற்றத்தால் அல்லைல் ஐசோதயோசயனைடு என்னும் வேதிப் பொருளாக மாற்றப்படுகிறது. இந்த வேதிப்பொருள் மனித உடல்நலத்திற்கு ஊறுவிளைவிக்கும் பாக்டீரியாக்களை அழிக்க பெருமளவில் பயன்படுகிறது. காட்டு முள்ளங்கி மிதமான சூழ்நிலையில் வளரக்கூடிய ஒரு பல்லாண்டு தாவரமாகும். மணல் கலந்த வண்டல்மண் வேர்கள் நன்கு ஊன்றி வளர மிகவும் ஏற்றதாகும். நல்ல வடிகால் வசதி வேண்டும். கடுங்குளிரான மற்றும் வறட்சியான பகுதிகளில் நன்கு வளரும்.

**பயிர் பெருக்கம்:** ஒரு சென்டிமீட்டர் தடிமனும் 10-15 சென்டிமீட்டர் நீளமும் உடைய வேர் குச்சிகள் மிகவும் உகந்ததாகும். இக்குச்சிகளில் வேர் பிடிப்பதற்கு அதிக பரப்பளவு இருக்குமாறு அதன் கீழ்ப்பகுதியில் சாய்வாக வெட்ட வேண்டும். பின்னர் இந்த வேர்க்குச்சிகளை ஈரப்பதம் மிக்க நல்ல மணற்பாங்கான நாற்றங்காலில் சற்று சாய்வாக நடவேண்டும்.

நடவு: நன்கு வேர் பிடித்த வேர்க் குச்சிகளை 45து30 செ.மீ. இடைவெளியில் வயலில் நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு சுமார் 9000-10,000 வேர்க்குச்சிகள் தேவைப்படும்.

**நீர் மேலாண்மை:** செடிகள் நன்கு வளரவும் வேர்ப்பகுதி திரட்சியடையவும் வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சுதல் அவசியமாகும்.

**அறுவடை:** தரைக்கு மேலே உள்ள இலை மற்றும் தண்டுப்பகுதி நன்கு காய்ந்து மஞ்சள் நிறமாக மாறுவதே அறுவடைக்கான அறிகுறியாகும். பொதுவாக காட்டு முள்ளங்கியானது அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. வணிக முக்கியத்துவம் வாய்ந்த வேர்ப்பகுதியை அறுவடை செய்ய முதலில் தரைக்கு மேலே உள்ள காய்ந்த தண்டு மற்றும் இலைப்பகுதியை நீக்க வேண்டும். பின்னர் நிலத்தில் நீர் பாய்ச்சிய பிறகு இதன் வேர்ப்பகுதியைத் தோண்டிஅறுவடை செய்ய வேண்டும்.

**சேமிப்பு:** அறுவடை செய்யப்பட்ட வேரினை 30-35 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை மற்றும் 95 சதம் ஈரப்பதத்தில் சேமிப்பதன் மூலம் தீமை தரும் பூஞ்சைகள் மற்றும் பூச்சிகளின் தாக்குதலிலிருந்து வேர்ப்பகுதியைப் பாதுகாக்க முடியும்.

**தர நிர்ணயம்:** வேரானது வளைவுகளின்றி நேராகவும் மற்றும் நல்ல மணமுடையதாகவும் இருக்க வேண்டும். வேர்கள் குறைந்த பட்சம் 15 செ.மீ. நீளமுடையதாகவும் 1.5 செ.மீ. தடிமன்

உடையதாகவும் இருக்க வேண்டும்.

**மகசூல்**: ஒரு ஏக்கரிலிருந்து சுமார் 1000-2000 கிலோ வரையிலான மகசூலை நாம் பெறமுடியும்.

**பயிர் பாதுகாப்பு**: முட்டைக்கோசு புழுவானது வெளிறிய பச்சை நிறத்தில் மஞ்சள் நிற கோடுகளுடன் காணப்படும். இவை தண்டு மற்றும் இலைப்பகுதியை கடித்து பயிருக்கு சேதம் விளைவிக்கும். இதனை கட்டுப்படுத்த புழுவினால் தாக்கப்பட்ட பகுதியை வெட்டி நீக்கிவிட வேண்டும். மேலும் முட்டை, புழு மற்றும் கூட்டுயிரி ஆகியவற்றை கைகளால் பொறுக்கி அப்புறப்படுத்த வேண்டும்.

(தகவல்: ச.செந்தில்குமார், வ.ஆறுமுகம், தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003)

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,00:00 IST



**மிளகாய்:** மிளகாய் நாற்றுகள் நடவு செய்த தோட்டங்களில் முதல் தவணை மேலுரமாக எக்டருக்கு 50 கிலோ தழைச்சத்து மற்றும் 20 கிலோ சாம்பல்சத்து தரும் உரங்களை இடவேண்டும். காய்ப்புழுக்களைக் கண்காணிக்க இனக்கவர்ச்சிப் பொறிகளை பயிரின் உயரத்திலிருந்து 8 அங்குலம் உயரத்தில் ஏக்கருக்கு 4 அல்லது 5 என்ற எண்ணிக்கையில் நிறுவ வேண்டும். காய்ப்புழுக்களைக் கட்டுப்படுத்த பறவை தாங்கிகளை ஏக்கருக்கு 10 என்ற எண்ணிக்கையில் அமைக்க வேண்டும். குண்டூர் சன்ன மிளகாய்க்கு புவிசார் குறியீடு: உலக அளவில் பிரபலமான குண்டூர் சன்ன மிளகாய்க்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. தாவரவியலில் Capsicum annuum var.longum என்று அழைக்கப்படும் மிளாய்க்கு ஏற்றுமதி வாய்ப்பு அதிகமுள்ளது. இந்த மிளகாய்

ஆந்திர மாநிலத்தில் குண்டூர் வாரங்கல் கம்மம் மற்றும் பிரகாசம் மாவட்டங்களில் அதிக அளவில் பயிராகிறது.

புவிசார் குறியீடு என்பது ஓர் அறிவுசார் உரிமையாகும். (Intellectural Property Right) இதனால் குறிப்பிட்ட பொருளின் புவியியல் காரணிகளின் அடிப்படையில் அதன் தரம், தன்மை மற்றும் குறிப்பிட்ட பகுதியில் மட்டும் உற்பத்தியாகும் விதம் போன்றவற்றின் அடிப்படையில் வழங்கப்படுவதாகும். இச்சான்று வழங்கப்படுவதன் நோக்கம் இது போன்ற பொருட்களின் சிறப்புத் தன்மைக்கு வேறு யாரும் உரிமை கூறி வரக்கூடாது என்பதற்காகும்.

சென்னையிலுள்ள Geographical Indication Registry அதன் பிரிவு 30ன் கீழ் வேளாண் விளைபொருட்களான டீ, காபி, ஸ்பைசஸ் போன்றவைகளுக்கானது பதிவு செய்துள்ளது. இந்த பதவின் மூலமாக இந்தியா மட்டுமின்றி உலக அளவிலும் குண்டூர் சன்னம் மிளகாய்க்கு சட்டபூர்வமான பாதுகாப்பு உள்ளது. இதுபோன்ற புவிசார் குறியீட்டு பதிவு மலபார் மிளகு, அலப்பி கிரீன் கார்டமம் போன்ற வேளாண் பொருட்களுக்கு கிடைத்துள்ளது. (தகவல்: ஸ்பைசஸ் இந்தியா, செப்டம்பர் 2010) -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**சோகத்தூர் மானாவாரி விவசாயத்தில் உளுந்து சாகுபடி ஒரு புதிய திருப்பு முனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,00:00 IST



தமிழகத்தில் பருப்பு வகை உற்பத்தியை அதிகரிக்க நமதுஅரசு அரும்பாடுபட்டு வருகின்றது. பருப்பு வகையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது உளுந்தாகும். விவசாய இலகா தமிழகத்தில் பல பகுதிகளில் உளுந்து சாகுபடியை மானாவாரியில் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்து வருகின்றது. தர்மபுரி மாவட்டத்தில் சோகத்தூரில் விவசாயம் செழிப்பாக செய்யப்படுகின்றது. மானாவாரி நிலையில் கேழ்வரகு, சோளம், கொண்டைக்கடலை, கொத்தமல்லி போன்றவைகள்

அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. சோகத்தூரில் வளமான களிமண் பூமியும், வளம் சற்று குறைந்த எறங்காட்டு பூமியும் உள்ளன. எறங்காட்டு மண்ணில் செம்மண்ணும், மணலும் கலந்து இருக்கும். எறங்காட்டு பூமியில் உளுந்து சாகுபடி ஏற்று வரவில்லை. ஆனால் மானாவாரி கரிசல் மண் பூமியில் உளுந்து சாகுபடி செழிப்பாக உள்ளது. ஆனி கடைசி உளுந்து சாகுபடி செய்யும் பட்டமாகும். மானாவாரி நிலையில் சுமார் ஆறு மாத வயதுடைய சோளத்தின் சாகுபடி குறைந்து வருகின்றது. விவசாயிகளிடம் சாகுபடிக்கு மாடுகள் கிடையாது. விவசாயப்பணிகள் டிராக்டர் கொண்டுதான் செய்யப்படுகின்றது. சோளத்தில் வெள்ளை சோளம், மஞ்சள் சோளம் ஆக இரண்டு வகைகள் உள்ளன. மஞ்சள் சோளம் பூச்சிகால் பாதிக்கப் படுகின்றது. இந்தப் பூச்சிகள் வெள்ளை சோளத்தையும் பாதிப்பதால் மகசூல் குறைந்து சோள சாகுபடியில் லாபம் கிட்டுவதுஇல்லை. மேலும் மானாவாரி நிலங்களில் சோளம் சாகுபடி செய்த இடத்தில் இரண்டாவது மானாவாரி பயிர் சாகுபடி செய்ய இயலாது. இச் சூழ்நிலையில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டு வரும் உளுந்து விவசாயிகளின் கவனத்தை ஈர்த்து வருகின்றது. இதன் வயது மூன்று மாதங்களே. இதனை அறுவடை செய்த இடத்தில் இரண்டாவது மானாவாரிப் பயிராக கொண்டைக்கடலை அல்லது கொத்தமல்லி சாகுபடி செய்யலாம். உளுந்திற்கு விற்பனையில் நல்ல விலை கிடைக்கின்றது. விற்பனையில் கிலோவிற்கு ரூ.40/-லிருந்து ரூ.50/- வரை விலை கிடைக்கின்றது. வியாபாரத்தில் பிரச்னை ஏதும் கிடையாது. இன்று சோகத்தூரில் பல விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்கின்றனர். குறிப்பாக மாதையன் (ஆயுர்வேத டாக்டர்) மற்றும் புரு÷ஷாத்தமன் சோகத்தூர் பகுதியில் உளுந்தினை சிறப்பாக சாகுபடி செய்து கணிசமான லாபம் எடுக்கின்றனர். தற்போது ஆனியில் உளுந்து சாகுபடி செய்யும் **சோகத்தூர் விவசாயி ஆர்.ஸ்ரீதரன்** உளுந்து சாகுபடிக்கு செய்யும் செலவு மற்றும் கிடைக்கும் லாபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

* கிராமங்களில் தற்போது ஏர் உழுவதற்கு மாடுகள் கிடைக்காததால் டிராக்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவர் தனது கரிசல் மண்ணினை 4 சால் டிராக்டர் உழவிற்கு ரூ.2000/- செலவு செய்கிறார்.
* ஏக்கர் மகசூல் 4 மூடை அல்லது 400 கிலோ - கிலோ ரூ.40/- வீதம் வருவாய் ஏக்கரில் ரூ.16,000/-.
* சாகுபடி செலவு ரூ.6,750 போக ஏக்கரில் நிகர லாபம் ரூ.9,250/-

சோகத்தூர் விவசாயிகள் கடுமையாக உழைத்து நல்ல வருமானம் எடுப்பதால் சோகத்தூர் பகுதியில் உளுந்து சாகுபடி பரவி வருகின்றது. உளுந்து அறுவடை செய்த இடத்தில் மானாவாரி சாகுபடியில் இரண்டாவது பயிராக கொண்டைக்கடலை அல்லது கொத்தமல்லி சாகுபடி செய்து நல்ல வருவாய் எடுக்கின்றனர். சோகத்தூர் பகுதியில் மானாவாரி கரிசல் மண்ணில் உளுந்து சாகுபடி ஒரு புதிய திருப்பு முனையை ஏற்படுத்தி உள்ளது.**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**நெல்லி மரத்தை காய்க்க வைத்தல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,00:00 IST



நெல்லியை எவ்வாறு சாகுபடி செய்ய வேண்டும்: நெல்லிசாகுபடியில் ஒரு ஏக்கரில் 15 அடி இடைவெளியில் ஏறத்தாழ 200 கன்றுகள் வீதம் நடவு செய்யலாம். நடவு குழி 2 முதல் 3 அடி குழி எடுக்க வேண்டும். அதில் மண்புழு உரம் 2 கிலோ மற்றும் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, வேம், டிரைக்கோ டெர்மா விரிடி, சூடோமோனாஸ் ஆகியவற்றை 50 கிராம் வீதம் மொத்தம் 250 கிராம் 1 குழியில் இட்டு நடவேண்டும். ஒரு ஏக்கரில் 75 கன்றுகள் NA 7 -ம், 75 கன்றுகள் காஞ்சன், மீதமுள்ள சாக்கையா கிருஷ்ணா ஆகிய ரகங்களில் ஒவ்வொன்றிலும் 25 கன்றுகள் வீதம் நடவேண்டும்.

**கன்றுகள் நடும்பொழுது கவனிக்க வேண்டியவை:**

நடவின்பொழுது 3 அல்லது 4 ரகங்களை கலந்து நடவு செய்யலாம்.

ஒட்டு பகுதியில் அடியில் வரும் பக்கத்தளிரை கிள்ளிவிட வேண்டும்.

இரண்டு வரிசைக்கு இடையில் நடும்பொழுது குட்டை ரகங்களை மத்தியில் நடவு செய்யலாம்.

தோப்பைச் சுற்றி காற்றை தடுக்க சவுக்கு நடவு செய்யலாம்.

ஏக்கருக்கு 4 முதல் 6 தேனீ பெட்டி வைத்தால் மகரந்தச் சேர்க்கையின் மூலம் பூ பிடிப்பது அதிகமாக்கலாம்.

மரங்களை குட்டையாக வளர்க்க வேண்டும். (ஒடிவது மற்றும் மகசூல் இழப்பு குறைவு).

காய் பறித்தபின் கவாத்து 1 அல்லது 2 முறை செய்ய வேண்டும்.

தூர் பகுதியில் (உலர் மூடாக்கு) வெப்பத்தை கட்டுப்படுத்த செய்தால் நல்லது.

நெல்லி பராமரிப்பு: நெல்லியை பராமரிப்பு என்று பார்த்தால் காய்கள் நன்கு திரட்சியாக இருக்க 15 நாட்களுக்கு ஒரு முறை செடிகளுக்கு 2 லிட்டர் வீதம் அமிர்தகரைசலும் பூச்சி வராமல் இருக்க

பஞ்சகாவ்யம் மற்றும் பூச்சி விரட்டியையும் தெளிக்க வேண்டும். உரம் 5 வருடம் என்று பார்த்தால் 25 கிலோ சாணம் 5 கிலோ மண்புழு உரம் மற்றும் 250 முதல் 500 கிலோ வரை எலும்புத்தூள் இடலாம். இதை மரத்தின் வயதிற்கு ஏற்றாற்போல் வருடா வருடம் கூட்டிக்கொண்டே போக வேண்டும். இயற்கை வழியில் உரம் மருந்து கொடுத்தால் காய்கள் திரட்சியாகவும், பளபளப்பாகவும், நன்றாக கலராகவும் சுருக்கம் இல்லாமலும் கரும்புள்ளிகள் இல்லாமலும் இருக்கும். இதைத்தான் வியாபாரிகள் அதிகம் விரும்புவார்கள். மேலும் நெல்லி ஆண்டுக்கு இருமுறை பூ பிடிக்கும். ஆனால் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதியில் காஞ்சன் ரகம் ஆண்டு முழுவதும் பூத்து காய்க்கிறது. (காற்றில் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் காய்ப்பு நன்றாக இருக்கும். ஆனால் பிப்ரவரியில் பூக்கும் பூ காயாக மாறுவது குறைவு.) ஜூலையில் பூக்கும் பூக்களில் நிறைய காய்கள் கிடைக்கின்றன. ஆனால் அப்பொழுது விலை குறைவாக இருக்கும். **தொடர்புக்கு: எம்.சிவகுமார், திருநெல்வேலி. 98421 57331, 99942 23396. -கே.சத்தியபிரபா, 96591 08780.**

**அழுகிய காய்கறிகள் சாலையில் வீச்சு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 19,2010,23:23 IST

செங்கல்பட்டு : செங்கல்பட்டில் அழுகிய பூசணிக்காய்களை சாலையிலேயே கொட்டியுள்ளதால், இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர்.செங்கல்பட்டு நகராட்சி அலுவலகம் எதிரே பழைய பஸ் நிலையம் அருகில் மேட்டுத் தெரு அமைந்துள்ளது. இத்தெருவில் காய்கறி மார்க்கெட், மீன் மார்க்கெட் மற்றும் முக்கிய கடைகள் அமைந்துள்ளன. பிளாட்பார கடைகளும் ஏராளமாக உள்ளன. இச்சாலை எப்போதும் பரபரப்பாகவே இருக்கும். இங்குள்ள காய்கறி கடைகளில் சேரும் குப்பைகள், அழுகிய காய்கறிகள் தெருவில் அமைந்துள்ள மின்சார டிரான்ஸ்பார்மரை சுற்றி கொட்டப்படுகிறது. தினமும் சேரும் குப்பைகள் அன்றைய தினமே அகற்றப்படுவதில்லை. இதனால் குப்பைகள் மலைபோல் குவிந்துள்ளது. தற்போது ஆயுத பூஜைக்காக வியாபாரிகள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே பூசணிக்காய்களை கொண்டு வந்து குவித்துள்ளனர். இவற்றில் நூற்றுக்கணக்கான காய்கள் அழுகி விட்டன. அவற்றை சாலையிலேயே கொட்டியுள்ளனர். இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. பன்றிகள்,

நாய்கள், மாடுகள் குப்பைகளை கிளறிவிடுகின்றன.அவ்வழியே நடந்து செல்வோர் மூக்கை பிடித்தபடியே செல்ல வேண்டியுள்ளது. முதியவர்களும், இரு சக்கர வாகன ஓட்டிகளும் சாலையில் வீசப்பட்ட பூசணிக்காய்கள் மீது ஏறி கீழே விழுகின்றனர். டிரான்ஸ்பார்மரை சுற்றி பல மீட்டர் தூரத்திற்கு குப்பைகள் கொட்டப்பட்டுள்ளதால், மின்வாரிய ஊழியர்கள் மின்பழுது ஏற்பட்டால் டிரான்ஸ்பார்மர் அருகில் செல்ல முடிவதில்லை. நகராட்சி அதிகாரிகள் உடனடியாக அங்குள்ள குப்பைகளை அகற்றுவதோடு, சாலையிலேயே குப்பைகளையும், பூசணிக்காய்களையும் வீசுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்க உடனடி நடவடிக்கை அதிகாரிகளுக்கு கருணாநிதி உத்தரவு*



தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி தலைமையில், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் நேற்று நடைபெற்ற வேளாண் துறை ஆய்வுக்கூட்டத்தில், கேரள மாநிலத்தில், உரித்த தேங்காய் கொள்முதல் செய்வதில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் குறித்து அறிந்து வந்து அரசுக்கு அறிக்கை தர அமைக்கப்பட்ட குழுவினர் அளித்த அறிக்கையை, முதல்–அமைச்சர் கருணாநிதியிடம் வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் நேற்று அளித்தார். உடன், வேளாண் துறை செயலாளர் ராமமோகன் ராவ் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

சென்னை, அக்.20–

இலவச மின்சாரம் கோரியுள்ள 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகளை உடனுக்குடன் நிறைவேற்றுங்கள் என்று வேளாண்துறை அதிகாரிகளுக்கு, முதல்–அமைச்சர் கருணாநிதி அறிவுரை வழங்கினார்.

தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டு இருப்பதாவது:–

தமிழகம் சாதனை

தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி, தமிழகத்தில் வேளாண்துறை செயல்படுத்திவரும் திட்டங்கள் குறித்த ஆய்வினை வேளாண்துறை அமைச்சர், செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் முன்னிலையில் நேற்று ஆய்வு செய்தார். உணவு உற்பத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துவரும் இந்த அரசு, கடந்த 5 ஆண்டு காலத்தில் 7 ஆயிரத்து 437 கோடியே 22 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, 304 லட்சம் மெட்ரிக் டன் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது.

தொடர்ந்து உணவு உற்பத்தியைப் பெருக்கிடத் தேவையான இடு பொருட்களான விதை, உரம், பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு தங்கு தடையில்லாமல் கிடைப்பதற்கேற்ப இப்பொருள்களின் இருப்பினை கண்காணித்து சீராக விநியோகம் செய்திட அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றும், “ராஜராஜன் 1000’’ தொழில் நுட்பத்தைக் கடைப்பிடித்தால் எக்டேருக்கு சராசரியாக 7 ஆயிரம் கிலோ முதல் 8 ஆயிரம் கிலோ வரை அரிசி உற்பத்தி கிடைக்கும் என்பதால், இத்தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிப்பதற்கு இதுவரை வழங்கப்பட்டுள்ள 2.43 லட்சம் மார்க்கர்கள், 3.63 லட்சம் கோனா களை எடுக்கும் கருவிகள் ஆகியவற்றுடன்; இக்கருவிகள் மேலும் தேவைப்படும் விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கிட ஆவன செய்திட வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மரபணு பூங்காக்கள்

எண்ணை வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும்; துல்லிய பண்ணைப் பயிர்த் திட்டம் மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்திட வேண்டுமென்றும்; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகை மரபணு பூங்காக்கள் அந்தந்த நிலப்பகுதிகளுக்குரிய அரிய வகைத் தாவரங்களைப் பாதுகாப்பதுடன், அந்தந்த பகுதி விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட வேண்டுமென்றும்

முதல்–அமைச்சர் கருணாநிதி அறிவுறுத்தினார்.

அரசு தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளதன் பயனாக, 2006–ல் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 141 லட்சம் மெட்ரிக் டன் என்பது தற்போது 179 லட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதையும் அதிகாரிகள் வாயிலாக அறிந்த முதல்–அமைச்சர் கருணாநிதி, இந்த உற்பத்தி மேலும் அதிகரிக்கப்பட ஊக்கமுடன் செயல்படுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

உடனடி கடன்

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் வெள்ளம் மற்றும் வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்ட 8 லட்சத்து 61 ஆயிரத்து 822 விவசாயிகளுக்கு இதுவரை 944 கோடியே 8 லட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ள விவரங்களைக் கேட்டறிந்த முதல்–அமைச்சர் கருணாநிதி, மேலும் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்திட உடனடியாக நடவடிக்கைகளை எடுத்திடுமாறு முதல்–அமைச்சர் அறிவுறுத்தினார்.

வேளாண் சாகுபடியில் தொழிலாளர் பற்றாக்குறையை ஈடு செய்ய வேளாண் எந்திரங்கள் வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு உடனடியாக மானியத்துடன் கடனுதவி கிடைத்திட ஆவன செய்திட வேண்டுமென்றும்; உழவர் சந்தைகள் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் பெரும்பயன் அளித்து வருவதால் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள 153 உழவர் சந்தைகளுடன், புதிதாக அமைக்கப்பட்டுவரும் 25 உழவர் சந்தைகளையும் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

விரைவாக முடிக்க அறிவுரை

நாளொன்றுக்கு 15 மெட்ரிக் டன்னுக்கு மேலாக காய்கறிகள் வரக்கூடிய 22 உழவர் சந்தைகளில் 2 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர் பதன கிட்டங்கி வசதிகள் 1 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில் செய்து கொடுக்கப்பட்டுள்ளதற்கும்; திருநெல்வேலி மாவட்டம், காவல் கிணற்றில் 1 கோடியே 63 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் மலர் ஏல மையம் அமைக்கப்பட்டுள்ளதற்கும் அதிகாரிகளைப் பாராட்டிய முதல்–அமைச்சர் கருணாநிதி, இவை விவசாயிகளுக்கு முழுமையாகப் பயனளிக்கும் வகையில் பழுதின்றி முறையாகச் செயல்படுகின்றனவா என்பதனை அடிக்கடி கண்காணித்துச் செயல்படுத்திட வேண்டும் என்றும் ;

ஓடைப்பட்டியில் திராட்சைக்கும், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கும், மேச்சேரி மற்றும் பாலக்கோட்டில் தக்காளிக்கும், பொங்கலூரில் வெங்காயத்திற்கும் தலா 1 கோடி ரூபாய் செலவிலும், பட்டுகோட்டையில் தேங்காய்க்கென 4 கோடி ரூபாய் செலவிலும்

நடைபெற்றுவரும் வணிக வளாகக் கட்டுமானப் பணிகளையும்; திருச்சி, மோகனூர், திருவைகுண்டம், சின்னமனூர் ஆகிய இடங்களில் தலா 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுவரும் வாழைக் காய்களைப் பழுக்க வைக்கும் கூடங்களின் கட்டுமானப் பணிகளையும் விரைவில் முடித்து அவற்றைச் செயல்பாட்டுக்கு கொண்டுவர அதிகாரிகள் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இலவச பம்பு செட்டு

இந்த அரசு விவசாய பம்பு செட்டுகளுக்கு ஏற்கனவே இலவச மின்சாரம் வழங்கிய திட்டத்தில் 21 லட்சத்து 98 ஆயிரத்து 790 விவசாயிகள் பயனடைந்துவரும் நிலையில், சுயநிதி அடிப்படையில் மின் இணைப்புப் பெற்றுள்ள 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு ஆண்டுதோறும் இலவச மின்சாரம் வழங்கப்படுவதையும், இலவச மின்சாரம் கோரி தற்போது நிலுவையில் உள்ள 2 லட்சம் விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளதையும் நினைவுகூர்ந்த முதல்–அமைச்சர், இத்திட்டப் பணிகளைச் சுணக்கம் இல்லாமல் உடனுக்குடன் நிறைவேற்றி விவசாயப் பணிகள் தொய்வின்றி நடைபெறவும், விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவும் மிகுந்த பொறுப்போடு பணியாற்றிட வேண்டுமென அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பித்தார்.

இந்த ஆய்வின் தொடக்கத்தில், கேரள மாநிலத்தில் உரித்த தேங்காய் கொள்முதல் செய்வதில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் குறித்து அறிந்து வந்து அரசுக்கு அறிக்கை தர அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையை முதல்–அமைச்சரிடம், வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், தலைமைச் செயலாளர் சு.மாலதி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் க.சண்முகம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் பா.ராமமோகனராவ், வேளாண்மைத்துறை ஆணையர் சி.கோசலராமன், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் பி.சந்திரமோகன் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் அதுல் ஆனந்த், சர்க்கரைத்துறை ஆணையர் விக்ரம் கபூர் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நடப்பு சந்தைப்படுத்துதல் பருவத்தில் நெல் கொள்முதல் 29 சதவீதம் சரிவு



பிரபா ஜெகன்னாதன்

புதுடெல்லி

அக்டோபர் 1–ந் தேதி தொடங்கிய நடப்பு கரீஃப் சந்தைப்படுத்துதல் பருவத்தில், 15–ந் தேதி வரை, இந்திய உணவுக் கழகத்தின் நெல் கொள்முதல் 29 சதவீதம் சரிவடைந்து 28 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 39.70 லட்சம் டன்னாக இருந்தது.

முன்னணி மாநிலங்கள்

மத்திய அரசின் கொள்முதலில் பஞ்சாப் மாநிலத்தின் பங்களிப்பு 81 சதவீதமாக உள்ளது. இம்மாநிலத்திலிருந்து மட்டும் 22.70 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாக அரியானா, தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. கேரள மாநிலத்திலிருந்து 16,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2008–ஆம் ஆண்டில், அக்டோபர் 1–15 காலத்தில் மத்திய அரசின் நெல் கொள்முதல் 46.40 லட்சம் டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இது, சென்ற ஆண்டில் 14 சதவீதம் சரிவடைந்துள்ளது. நடப்பாண்டில், நெல் உற்பத்தியில் முன்னிலையில் உள்ள பஞ்சாப் மற்றும் அரியானாவில் மழை, வெள்ளம் காரணமாக உற்பத்தி சிறிது பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசின் நெல் கொள்முதலும் பாதிப்புக்குள்ளாகும்.

நடப்பு ஆண்டு கரீஃப் பருவத்தில் (ஜூன் – அக்டோபர்) நாட்டின் நெல் உற்பத்தி 8.50 கோடி டன்னாக இருக்கும் என வேளாண் துறை அமைச்சகம் மதிப்பீடு செய்திருந்தது. ஆனால், தற்போது இதில் 50 லட்சம் டன் குறையும் நிலை உருவாகியுள்ளது. இதனால் 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) நெல் உற்பத்தி, 10 கோடி டன் என்ற

இலக்கிலிருந்து 9.50 கோடி டன்னாக குறையும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
கையிருப்பு

உற்பத்தி நிலவரம் எவ்வாறு இருப்பினும், மத்திய அரசிடம் நெல் கையிருப்பு தாராளமாக உள்ளது. 2007–08–ஆம் ஆண்டிலிருந்து அரிசி ஏற்றுமதிக்கு தடை இருந்து வருகிறது. நெல் கையிருப்பு அதிகரித்து வருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். அக்டோபர் 1–ந் தேதி வரை, 1.84 கோடி டன் கையிருப்பு உள்ளது. ஆனால் அரசு விதிமுறைகளின்படி இது தற்போது 52 லட்சம் டன் இருந்தாலே போதுமானது. ஜனவரி 1–ந் தேதி தொடங்கும் காலாண்டில் அரசின் கைவசம் 1.18 கோடி டன் நெல் கையிருப்பில் இருக்க வேண்டும். இதன்படி பார்த்தாலுமே, கையிருப்பு தேவைக்கு அதிகமாகவே உள்ளது.

10 வருட சேவையில்... தமிழ் கூடல்

**வீணாகும் உணவு தானியங்களை ஏழைகளுக்கு வழங்க வேண்டும்: உச்ச நீதிமன்றம்**



புதுடெல்லி, அக். 19-
சேமிப்பு கிடங்குகளில் வீணாக்குவதற்கு பதிலாக, உணவு தானியங்களை ஏழைகளுக்கு மலிவு விலையில் வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் மீண்டும் யோசனை தெரிவித்துள்ளது.

பொது வினியோக திட்டத்தில் ஊழல் நிலவுவதாகவும், உணவு தானியங்கள் வீணாக்கப்பட்டு வருவதாகவும் "மக்கள் சிவில் உரிமை கழகம்" என்ற அமைப்பு, உச்ச நீதிமன்றத்தில் பொதுநலன் மனு தாக்கல் செய்துள்ளது. இம்மனுவை கடந்த மாதம் விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தல்வீர் பண்டாரி, தீபக் வர்மா ஆகியோர் அடங்கிய அமர்வு, உணவு தானியங்களை ஏழைகளுக்கு இலவசமாக வழங்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. ஆனால், அதை அமல்படுத்துவது சாத்தியம் அல்ல என்றும், மத்திய அரசின் கொள்கை விசயங்களில் நீதிமன்றம் தலையிடக் கூடாது என்றும் பிரதமர் மன்மோகன்சிங் கூறிவிட்டார்.

இந்நிலையில், இந்த வழக்கு, உச்ச நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு சார்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மோகன் பராசரன் ஆஜரானார். அவரைப் பார்த்து, "இந்திய உணவு கழக உணவு கிடங்குகளில் உணவு தானியங்கள் கெட்டுப்போக காரணமாக இருந்தவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?" என்று நீதிபதிகள் கேட்டனர். அதற்கு மோகன் பராசரன், அந்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார். மோகன் பராசரன் மேலும் கூறுகையில், "இந்திய உணவு கழக கிடங்குகளில் 7 ஆயிரம் டன் உணவு தானியங்கள் மட்டுமே அழுகிப் போய்விட்டன. ஆனால், அரியானா மற்றும் பஞ்சாப் மாநில அரசுகளின் கிடங்குகளில் 67 ஆயிரத்து 539 டன் தானியங்கள் கெட்டுப் போய்விட்டன" என்றார்.

அவருக்கு நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர். அவரைப் பார்த்து நீதிபதிகள் கூறியதாவது:-

7 ஆயிரம் டன்னாக இருந்தாலும், அது ஏன் கெட்டுப்போனது? அதைத் தவிர, 2 மாநிலங்களிலும் உணவு தானியங்கள் கெட்டுப் போயுள்ளன. இது மிகவும் சீரியசான விசயம். 7 ஆயிரம் டன் தானியங்கள் கெட்டுப் போனதை நீங்களே ஒப்புக்கொள்கிறீர்கள். மக்கள் பசியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு நீங்கள் தானியம் தரவில்லை. ஒருபுறம் மக்கள் பசியால் சாகும்போது, தானியங்களை வீணாக்குவதை நியாயப்படுத்த முடியாது. இந்த மனு, 10 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இந்த காலகட்டத்தில், நீங்கள் உணவு தானியங்கள் வீணாவதை தடுத்து, அதை உரிய முறையில் ஏழைகளுக்கு வினியோகிக்க திட்டம் வகுத்திருக்க வேண்டும்.

தற்போது, காரிப் பருவ சாகுபடி அறுவை நடந்து கொண்டிருக்கிறது. அதனால், மத்திய அரசு உணவு கிடங்குகளுக்கு நிறைய தானியங்கள் வந்து கொண்டிருக்கும். அவற்றை சேமித்து வைக்க உரிய வசதிகளை செய்ய வேண்டும். உரிய முறையில் வினியோகம் செய்ய வேண்டும். வீணாக

போகவிடுவதற்கு பதிலாக, அவற்றை ஏழைகளுக்கு மலிவு விலையில் வழங்கலாம். அந்த தானியங்கள், மனிதர்கள் சாப்பிட தகுதியற்றவை என்றால், அவற்றை மனிதர்களுக்கு தருமாறு சொல்ல மாட்டோம். சொல்லப் போனால், விலங்குகளுக்கு கூட அவற்றை தரக்கூடாது. ஏனென்றால், விலங்குகளுக்குத்தான் நீங்கள் அதிகமாக பயன்படுத்தி வருகிறீர்கள். மாநிலங்கள் அதிகமான உணவு தானியங்களை ஒதுக்குமாறு கேட்கின்றன. ஆனால், அவற்றை ஒதுக்கீடு செய்வதில் மத்திய அரசுக்கு என்ன கஷ்டம்? இவ்வாறு நீதிபதிகள் கூறினர். இவ்வழக்கில், இன்றும் விசாரணை நடைபெறுகிறது.